# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)



## 'ஜெபம்' நமது சுவாசம்! ஜெபமின்றி ஆத்ம உயிர் இல்லை!

மிகப்பெரிய டால்பின் மீன்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் சுகமாய் வசிப்பதற்கு காரணம், குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் சமுத்திரத்தின் மேல் பரப்பில் துள்ளி துள்ளி குதித்து, தங்களுக்குத் தேவையான பிராண வாயுவை பெற்றுக்கொள்ளும் இரகசியமேயாகும். நாமும் இதைப்போலவே, நம் ஜெப ஜீவியத்தை ஆவிக்குரிய நிலைக்கு உயர்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாக நம் ஜெபத்தில் சுவாசிப்பதே தேவனுடைய ஜீவனிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆவியாகும்! அவருடைய ஆவியிலிருந்தே நாம் ஜீவனையும் சமாதானத்தையும், இந்த கேடான உலகத்தில் பெற்று அனுபவிக்கிறோம்!

ஜெபமே, நமது வெற்றியின் இரகசியம்!

-tr



## ‘மேய்ப்பனில்லாத’ ஆடுகளின் நிலைமை!

இன்று சபைகளில் இருக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்கள்? “கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல” என வேதம் குறிப்பிடுகிறதே! பின்னே, அவன் யாருடையவன்? ஆம், அங்கு உட்கார்ந்திருக்கும் கிறிஸ்தற்ற மனுஷர், தங்கள் ஜென்ம சுபாவத்தைக் காண்பிப்பார்களே அன்றி, தெய்வீக பண்புடன் நடக்க மாட்டார்கள்! நடக்கவும் தெரியாது. சபையில் காணப்படும் சகல குழப்பங்களுக்கும், விரோதங்களுக்கும் ஜீவிய மாறுதல் இல்லாத இவர்களே, காரணமாயிருக்கிறார்கள்.

சபையார், ஆண்டவருக்கு உகந்தவர்களாய் நடந்து கொள்ள வேண்டும் என்பது எவ்வளவு உத்திரவாதமோ, அதேபோன்ற உத்திரவாதம் சபையின் போதகருக்கும் உண்டு! தன் ஆண்டவருக்கு உத்தம ஊழியம் செய்திட, இவர்கள் அயராது பாடுபடுவார்கள் என்றே கர்த்தர் எதிர்பார்க்கிறார்! ஆனால், இன்றோ அனேக ஊழியங்கள் அப்படியில்லையே!

கிறிஸ்தற்ற சபையார் நடுவில், ஒரு நல்ல போதகர் ஊழியம் செய்வாரானால், அவருடைய ஆத்தும பாரத்திற்கும், கவலைக்கும் அளவே இராது! அதுபோலவே, தேவ பக்தியில் வாஞ்சை கொண்ட ஓர் சபை மக்கள் மத்தியில், சத்தியத்தில் நிலை நிற்காத ஆத்தும பொறுப்பற்ற போதகர் ஒருவர் இருப்பாரானால், சபையார் சஞ்சலப்படாதிருக்க மாட்டார்கள்! அவர்களின் சஞ்சலம், மேய்ப்பனில்லாத ஆடுகளின் துயரமான சஞ்சலமேயாகும்!

*-Ed*

**2025 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஏப்ரல் 15-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## ‘தன் பெலவீனத்தை காண மறுத்து’ விசுவாசித்த ஆபிரகாம்!

*‘அவிசுவாசம்’ கர்த்தரை பரிகசிக்கும்*

தேவனிடமிருந்து வாக்குதத்தத்தைப் பெற்ற ஆபிரகாம், தன் சொந்த சரீரத்தையும் அதன் பெலவீனத்தையும் பார்க்காமல் இல்லை! தான் ஒரு தகப்பனாக முடியும் என தேவனிடமிருந்து கேட்ட வாக்குதத்தம் ‘தன் சரீரத்திற்கு’ பொருத்தமானதல்ல என அறியாதவனும் அல்ல! எல்லாம் அறிந்திருந்தும், தேவனுடைய வாக்குதத்தத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு விசுவாசித்தான்.

> “ **அதுஏனென்றால் தன்னை பார்ப்பதை நிறுத்திவிட்டு, வாக்குதத்தம் செய்த சர்வ வல்லவரை காணத் தொடங்கி விட்டான்!**

“தேவன் வாக்குதத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர்! என்பதை முழு நிச்சயமாய் நம்பினான்” (ரோமர் 4:21) என்றே வேதம் கூறுகிறது!

தேவனுடைய வாக்குதத்தத்தின் மீது ஆபிரகாம் சிறிதுகூட அவிசுவாசம் கொள்ளவில்லை! இவ்வளவு பெரிய வாக்குதத்த ஆசீர்வாதத்தை சுமந்து நின்ற அவன், தளர்ந்து போகவில்லை. அவனுக்கு உரைக்கப்பட்ட வாக்குதத்தங்கள் நிறைவேற பல ஆண்டுகள் தாமதமானாலும், வயது இன்னும் அதிகரித்துக்கொண்டே போனாலும், இந்த ஆபிரகாம், சலிப்படையவில்லை என்பது மாத்திரமல்ல “**ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவனானான்**” என வேதம் கூறுவது நமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகிறது! தாமதம் மிகுந்த மனச்சோர்வு ஆபிரகாமை மடங்கடிப்பதற்குப் பதிலாக “தேவனை **இன்னமும் அதிகமாய் மகிமைப்படுத்தினான்**” (ரோமர் 4:21) என்றல்லவா வேதம் கூறுகிறது! ஆபிரகாம், தேவனையும் தேவனுடைய வாக்குதத்தத்தையும் முழு நிச்சயமாய் நம்பினான் என கூறப்பட்ட வார்த்தைக்கு, கிரேக்க மொழிபெயர்ப்பு கூறுவது என்னவென்றால் “வாக்குதத்தத்தை நிறைவேற்ற வல்ல கர்த்தர், அதிக அதிகமான வல்லவர்!” என்று விசுவாசித்ததாக கூறப்பட்டுள்ளது. கர்த்தர்

*தான் உரைத்ததை செய்து முடிப்பதற்கு, ஏராளமான வழிகளையும் யோசனைகளையும் கொண்டவர்! என்றும் அந்த கிரேக்க மொழி பெயர்ப்பு எடுத்துரைக்கிறது!*

"

**இத்தனை திரளான பாக்கியங்களை தேவன் நமக்காக சுமந்து வந்தாலும், தடை என்பதெல்லாம் நாமாக மாத்திரமே இருக்க முடியும்! நாம் சிந்திப்பதும், நாம் ஜெபிப்பதும், விசுவாசிப்பதும், நாம் எதிர்பார்ப்பதும் வெகு குறைவாகவே இருக்கிறது.**

*ஆனால் தேவனோ 'உயர்ந்த' எண்ணங்களுக்குள் நம்மை சிறைப்படுத்தவே விரும்புகிறார். அவராகவே தரும் 'உயர்ந்த' ஐசுவரியத்தின் மீது முழு கவனமும், முழு கவர்ச்சியான ஈர்ப்பும் நாம் பெற்றுக்கொள்ளவே நாடுகிறார்! நம்மீது இத்தனை மேன்மையான நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும், காத்திருக்கும் தேவனை, நம் 'அவிசுவாசத்தால் பரிகசித்து' ஏளனம் செய்யாதிருப்போமாக!*

*நாம் எவ்வளவோ ஏராளமாயும், விஸ்தாரமாயும் தேவனிடம் கேட்க முடியும்! 'நம் மகிமையுள்ள எல்-ஷடாய் ஆகிய சர்வ வல்ல தேவன்'* **முழு நிச்சயமாய் சகலத்தையும் தர வல்லவர்.** *ஆனால், அதற்கு ஒரே ஓர் அளவுகோல் மாத்திரமே உள்ளது. அதுஎன்னவென்றால் "நமக்குள் அவர் கிரியை செய்திடும் வல்லமைக்கு ஒப்பாகவே" என்ற அளவுகோல் அவரவர்களுக்குரியதாய் இருக்கிறது. அந்த அளவுகோல் நமக்குள் எவ்வளவு பெரிதான கிரியை நடப்பிக்கிறதோ அந்த அளவின்படி சகலத்தையும் நமக்குத் தந்திட தேவன் ஆயத்தமுள்ளவராயிருக்கிறார்!*

*இதைக்குறித்து A.B.சிம்சன் குறிப்பிட்டு கூறும்போது "தேவனுடைய ஆசீர்வாதத்தால் நிரம்பிய அவருடைய பொக்கிஷ சாலையின் சிகரத்திற்கு ஏறி வரத் தொடங்குகள். நீங்கள் ஏறிவரும் ஏணிக்குப் பெயர்தான் '***திவ்விய வாக்குதத்தங்கள்***'. ஒரு வாக்குதத்தத்தின் மீது நீங்கள் கொண்ட விசுவாசமே, உங்களுக்கு அருளப்பட்ட ஒரு சாவி! அதை வைத்து, தேவ கிருபையின் ஐசுவரியத்தை தரும் கதவைத் திறவுங்கள்! இவ்வாறு உங்களுக்கு வழங்கப்பட்ட சாவியை எவ்வளவு அதிகம் பயன்படுத்தினீர்களோ, அவ்வளவு அதிகமாய் கிருபையிலும், தேவ தயவிலும் நீங்கள் பெலன்கொண்டு விசுவாசத்தில் வல்லவராய் மாறுவீர்கள். இனி, வானுயர்ந்த பரலோகத்தின் ஒளியே அல்லாமல், வேறே எந்த இருளும் இருப்பதில்லை! எந்த தாழ்வும் ஏற்பட போவதில்லை!" என மிக நேர்த்தியாய் அவர் கூறினார்!*

*- Mrs.சார்லஸ் கௌவ்மென்*

## பிரசங்க மேடை 'தூஷிக்கும் மேடையாய்' கறைபடக் கூடாது!

*பரிசுத்த சபையில் 'அசுத்தம்' ஏற்படுவது தவறு*

பரிசுத்த ஊழியனாகிய பவுல், "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோம் என்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி!" என 1தெசலோனிக்கேயர் 2:10-ம் வசனத்தில் கூறிய வாசகத்தை, உத்தமமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் ஒவ்வொருவரும் மனதில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும்!

பிரசங்க மேடையில் வந்து நிற்கும் ஒரு பாஸ்டர் அல்லது ஒரு பிரசங்கி அசுத்த உதடுகளுடன் 'தன் பிரசங்க போர்வையில்' தூஷண வார்த்தைகளை சரளமாய் பேசும் கொடிய காலத்தில் இருக்கிறோம்!

மிகுந்த பயபக்தியோடும், கண்ணியமான உணர்வோடும் தங்கள் பொது வாழ்க்கையில் பேசிப் பழகியவர்கள் மாத்திரமே'அதே தெளிர்ந்த உணர்வில்' பிரசங்க மேடைக்கு வந்து நிற்க தகுதியுடையவர்!

> "**நெரிசலான போக்குவரத்து சமயங்களிலும் அல்லது உணவு வேளையில் மனைவியோடு சேர்ந்து சாப்பிடும் சமயத்திலும், இரட்சிக்கப் படாதவர்களிடம் பேசிய சமயத்திலும், உடன் சகோதரனை தீது பேசி சபித்த சமயத்திலும், நீங்கள் சம்பாஷித்த அதே உணர்வோடுதான் பிரசங்க பீடத்திலும் நிற்கும் உத்தமம் வேண்டும்!**

நேர்மை கொண்ட இந்த உத்தமத்தை பிரசங்க மேடையில் நாம் காண்பது இன்று அரிதாகி விட்டது! ஏனெனில், பொது வாழ்வின் வெளியே ஆத்திர கோபமடைந்துவிட்டு, பிரசங்க மேடையில் அன்புள்ளம் கொண்டவரைப்போல் நடிக்கிறார்கள்! இதுபோன்ற 'மாய்மாலம்' நிலைநிற்பதும் இல்லை!

இன்றைய சீரழிந்து வரும் சபையின் தரத்தில் "**அழுக்கான கொச்சை வார்த்தைகளைப் பேசும்**" கிறிஸ்தவர்கள் பெருகிவிட்டார்கள்! தங்கள் போதகரே 'கொச்சை மொழி' பேசுகிறபடியால், நாங்களும் பேசுகிறோம்! என்ற துணிகரம் புகுந்துவிட்டது! ஒரு உத்தம கிறிஸ்தவனின் மனது தெளிந்த நீரோடையைப் போன்ற தூய்மை கொண்டதாய் இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் மாத்திரமே "பாலியத்தை பற்றியோ அல்லது மனுஷனின் உடற்கூறு பற்றியோ கொண்ட அருவருப்பான சேதிகள்" அவன் வாயிலிருந்து புறப்பட்டு வராது! இந்த தரத்தையே பவுல் வலியுறுத்தி "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்!

*பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள். மேலும், வம்பும் புத்தியீனமான பேச்சும், அருவருப்பான கேலி பரியாசமும் தகாதவைகள்....'' என்றும் ஆணித்தரமாய் வலியுறுத்தினார் (எபே.4:29;5:24).*

*ஒரு சமயம், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களோடு அவருடைய உடன் அதிகாரிகள், ஒரு அறையில் கூடி வந்திருந்தார்கள். அங்கு கூடியிருந்த ஒரு அதிகாரி, ஒரு அருவருக்கத் தகுந்த சேதியைச் சொல்ல விரும்பினார். அவர் பேச எழுந்து, எல்லா அதிகாரிகளையும் சுற்றிப் பார்த்து ''இங்கு பெண்கள் யாருமில்லை! ஆகவே, நான் சொல்ல வந்த சேதியை கூறலாம் என நான் எண்ணுகிறேன்'' என்றார்! உடனே வாஷிங்டன் அவர்கள் எழுந்து நின்று ''***பெண்கள் ஒருவருமில்லைதான்.... ஆனால் இங்கு கண்ணியத்திற்குரிய புருஷர்கள் இருக்கிறார்கள்!***'' *எனக் கூறியவுடன், அந்த அதிகாரி வெட்கத்துடன் தன் அழுக்கான சேதியை தன் கறைப்பட்ட தலைக்குள்ளும், தன் கேடான இருதயத்திற்குள்ளும் வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டார்!*

*ஆம், அக்கினி மயமான பரிசுத்தாவியின் பிளவுண்ட நாவுகளே பிரசங்க மேடைகளை ஆட்கொள்ள வேண்டும்! துணிகர தூஷண வார்த்தைகள் இன்றும் என்றும் ஒழியட்டும்! வேண்டும், ஆம் பிரசங்க மேடையில் புனிதம் வேண்டும்!!*

*- A.W.டோசர்*

---

## 'கவலை' சரீர அளவை கூட்டுவதைவிட, கொல்லும்!

*ஜீவிய கால நிர்ணயம் கர்த்தருடைய கரத்தில் உள்ளது*

*ஆண்டவர் இயேசு, ''அநேகம் அடைக்கலான் குருவிகளைக் காட்டிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறபடியால்,* **பயப்படாதிருங்கள்**'' *என நம்மிடத்தில் கூறுவது விசேஷித்த வாக்கு அல்லவா! (மத்தேயு 10:31).*

*ஒரு பறவையைக் காட்டிலும் நீங்கள் விசேஷமானவர்கள் என நீங்கள் உணர்வதற்கு உங்களால் ஏன் முடியவில்லை? எந்தவொரு பறவையும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்படவில்லை! இயேசு கிறிஸ்துவின் சுதந்தரவாளிகளாய் அவைகள் மாறுவதற்கு அருளப் படவில்லை! பிதாவின் வீட்டில் வாசம் செய்திட ஓர் வாசஸ்தலம் அவைகளுக்கு அருளப்படவில்லை! நித்தியத்திற்கு பங்கு இல்லாத 'ஒரு பறவைக்கு இவ்வளவு போஷிப்பார் என்றால்' உங்கள் மீது எவ்வளவு அக்கறை காட்டுவார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?*

“ **‘நித்திய ஜீவன் என்பது’ எந்த ஜீவனைக் காட்டிலும் மிக உயர்ந்தது அல்லவா? அப்படியிருக்க, ‘இந்த உலகத்தில்’ உங்கள் உயிர் வாழும் படியான குறைந்த போஷிப்பை அவர் உங்களுக்குத் தந்து ஆதரிக்காமல் இருப்பது எப்படி?**

*நிச்சயமாய் தந்து, போஷித்து, ஆதரிப்பார்! ஆகவே, இனியும் உலகில்வாழும் ‘இந்தஜீவனுக்காக’ கவலைப்படுவதை நிறுத்திவிடுங்கள்!*

*ஆகிலும், இந்த பறவைகள் தங்களுக்குத் தேவனால் அருளப்பட்ட ‘மறைவான உத்வேகப்படி’* (INSTINCT) *உணவை தேடுகின்றனவே, அதுபோலவே மனுஷர்களாகிய நாம், நம் தேவைகளை ‘முயற்சித்து தேட’* (effort) *கட்டளை வழங்கியிருக்கிறார். ஆகவேதான், ஒருவன் வேலை செய்கிறதற்கு மனது இல்லாதிருந்தால், அவன் சாப்பிடலாகாது! என, 2தெசலோனிக்கேயர் 3:10-ம் வசனம் கூறுகிறது.*

*ஜனத்தொகை எவ்வளவு பெருகினாலும், ஒவ்வொரு முந்திய ஆண்டுகளைவிட நாம் வாழும் இந்த ஆண்டுகள், அதிக உணவுப்பெருக்கத்தை தந்துகொண்டு இருப்பதை இன்று வரை உள்ள புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆகவே “நான் உங்களைப் போஷிப்பேன்” என தேவன் கூறினால், அந்த வாக்கு எக்காலத்திற்கும் மாறாததாகவே இருக்கும்! இனிமுதற்கொண்டு “ஒரு பறவை உங்கள் ஜன்னல் ஓரத்தில் அமர்வதை கண்டால்” உங்களை சம்பூர்ணமாய் போஷித்து பாதுகாக்கும் தேவனை எண்ணிப் பார்த்து மகிழுங்கள். அப்படிச் செய்தால், உங்களைச் சூழ்ந்திருக்கும் ‘கவலை’ என்ற பதர், விரட்டியடிக்கப்படுவதை உங்கள் கண்ணார காண்பீர்கள்!*

“ **கவலைப்படுவது ஓர் மதியீனமான செயல் என்பதை “கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?” (மத்.6:27) என இயேசு சவாலிட்டு கூறினார். நீங்கள் கவலைப்பட்டு, கவலைப்பட்டு, உங்கள் ஜீவிய எல்லையை விஸ்தாரமாக்குவதற்கு பதிலாய், உங்கள் உயிரோட்டம் சீக்கிரமாய் குறைந்துவிடும் என்பதுதான் உண்மை!**

*ஓர் புகழ்பெற்ற மருத்துவ நிபுணராகிய ‘சார்லஸ் மயோ’ கூறும்போது, கவலைப்படும் ஒருவனுடைய இரத்த ஓட்டம் நிச்சயமாய் பாதிக்கப்படும்! பின்பு, அவனுடைய இருதயம், சுரப்பிகள், அவனுடைய முழு நரம்பு மண்டலமும் பாதிக்கப்படும்! என கூறினார். அவர் மேலும் கூறும்போது “ஏராளமான வேலைகளை ஒருவன் செய்தபடியால் சீக்கிரமாய் இறந்துபோனான்” என கூறுவதற்கு இந்த உலக சரித்திரத்தில் ஒருவனாகிலும் இல்லை! ஆனால், நானே கண்ணார*

பலரைக் குறித்து அறிந்ததெல்லாம் "**கவலைப்பட்டே மரித்திருக்கிறார்கள்**" என்ற உண்மைதான்! நீங்கள் மரணத்தைக் குறித்து கவலைப்படலாம்! ஆனால், நீடிய ஆயுசைப் பெறுவதற்கு கவலைப்படுவதால் ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது.

காரியம் என்னவென்றால், இன்று திரளான ஜனங்கள் தங்கள் ஜீவிய எல்லையை விஸ்தாரப்படுத்துவதற்கே அச்சத்தோடு முயற்சிக்கிறார்கள்! வைட்டமின் மாத்திரைகள், ஆரோக்கிய பரிசோதனைகள், உணவு பழக்கங்கள், சரீர அப்பியாசங்கள் போன்றவை மீது அதிகமான பற்றுதல் வைத்திருக்கிறார்கள். தேவனோ, நாம் எத்தனை காலம் வாழ வேண்டும் என்பதை முன்கூட்டியே நிர்ணயம் செய்து வைத்திருக்கிறார். யோபு 14:5-ம் வசனத்தில் தேவன் கூறும்போது "**அவனுடைய நாட்கள் இவ்வளவுதான் என்று குறிக்கப்பட்டிருப்பதால்,** அவனுடைய மாதங்களின் தொகை உம்மிடத்தில் இருக்கிறது! அதை மீறி, கடந்து போகக்கூடாத எல்லையை நீர் அவனுக்கு ஏற்படுத்தியுள்ளீர்" என்றே அறிவித்திருக்கிறார். இதனிமித்தமாய், நம் நல்ல உணவு பழக்கத்தையும், சரீர அப்பியாசத்தையும் குறித்த சிறந்த ஆலோசனைகளைப் புறக்கணிப்பது சரிதானா? அப்படியல்ல! அவைகளை நல்ல மனதோடு கடைப்பிடிப்பது, நம் ஜீவிய ஆரோக்கிய தரத்தை நிச்சயமாய் உயர்த்த முடியும்! ஆனால் அதே சமயம், இவைகளைக் கொண்டு உங்கள் ஜீவியத்தின் எல்லையை நீங்களாக பெரிதாக்கிக் கொள்ளலாம் என்பதற்கு, எந்த உத்தரவாதமும் இல்லை! நான் சரிவிகித உணவைப் புசித்து, உடற்பயிற்சியும் செய்யும்போது, என்னுடைய மூளையும் சரீரமும் ஆரோக்கியமாய் வேலை செய்ய முடியும் என்பது உண்மைதான். ஆனால் அதே சமயம் நான் செய்யும் உடற்பயிற்சியை முன்னிட்டு, உணவு பழக்கவழக்கங்களை முன்னிட்டு "நான் நீடித்த நாட்கள் வாழ வேண்டும்" என, ஒரு மனிதனும் தேவனை கட்டாய-நிர்பந்தம் செய்திட இயலாது!

> "**ஆகவே, நீங்கள் எவ்வளவு நாட்கள் உயிரோடு வாழ வேண்டும் என நீங்கள் கவலைப்படுவதும், உங்கள் ஆயுசு நாட்களை எவ்வாறு கூட்டிக் கொள்ளலாம் என கவலைப்படுவதும், தேவன் மீது கொண்ட அவிசுவாசத்தின் செயலேயாகும்!**

எதைக் காட்டிலும், உங்கள் முழு ஜீவியத்தையும் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவருடைய சித்தம் செய்வதற்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால், கர்த்தர் நிச்சயமாய் நீடிய ஆயுசான '**பூரண வயதை**' கட்டளையிடுவார். "ஓர் பரிபூரண வாழ்க்கை வாழ்ந்த அனுபவத்தை" உங்கள் ஜீவியத்தை

*நீங்கள், தேவனுடைய மகிமைக்காக வாழ்ந்து முடித்தால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். அப்படிப்பட்ட 'பூரண வயது' வாழ்க்கை நீண்ட வருடங்களாயும் இருக்கலாம், குறைந்த வருடங்களாயும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அந்த வாழ்க்கை ஓர் அதிசயமான 'மகிமை நிறைந்த' வாழ்க்கையாகவே நிலை நிற்கும்!*

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## இயேசு வாழ்ந்தார்! ஜீவ அனல்கொண்டு பேசினார்!

*'வாழாத கிறிஸ்தவ போதகம்' புறஜாதி மார்க்கத்து உபந்நியாசமே*

*இயேசுவை ஜெகத் குருவாகவும், நல்ல ஒழுக்க ஜீவியத்துக்கு மாதிரியாக மாத்திரமே ஒப்புக்கொண்டவர்களும் அநேகருண்டு. ஆகிலும், அவருக்குத் தன்னை முற்றிலும் ஒப்புவித்து, அவருடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே அவரை இன்னாரென்று அறிந்து பணிந்து தொழுதுகொள்வான்! உலகத்தில் எவரோடும் ஒப்பிடக்கூடாத நிகரற்ற போதகர் நம் ஆண்டவர் இயேசு!*

> **"அவருடைய உபதேசத்தையும் அவரையும் பிரிக்கமுடியாது. அவரும் அவரது உபதேசமும் ஒன்று! இதுவே அவருடைய வல்லமைக்கும் அதிகாரத்துக்கும் இரகசியம். *மோசேயும்* அவரது பிரமாணங்களும் ஒன்றல்ல. தேவனால் அருளப்பட்டவைகளை அவர் போதித்தார், அவ்வளவுதான்!**

*புத்தர் தனக்கு நலமாய் தோன்றின உபதேசத்தைப் போதித்தார். ஆகிலும், மற்றவர்கள் தன்னை நம்பவோ, தனது உதவியைத் தேடவோ அவர் போதிக்கவில்லை! முகமது ஓர் மார்க்கத்தை உண்டாக்கினார். அதைக் கைக்கொண்டு நடக்கும்படியான பலத்தை தன்னிடத்தில் பெற்றுக்கொள்ளும்படி அவர் சொல்லவில்லை! அந்த முகமது அவர் தாமே, மரண நேரத்தில் தன் பாவத்தை உணர்ந்தார். உபதேசங்களையும் போதனைகளையும் உலகத்துக்குக் கொடுத்தவர்கள் அநேகர். அவைகளைக் கைக்கொண்டு நடக்கச் செய்யும் சக்தியோ அவர்களில் இல்லை!*

*இங்கிலாந்தில் ஒரு சீனன் ஞானஸ்நானம்பெற்ற சமயத்தில், தான் கிறிஸ்தவனான காரணமென்னவென்று சபையாருக்குச் சொன்னான். அதாவது, என் மார்க்கத்தில் உபதேசங்கள் இல்லையென்று நான் கிறிஸ்து மார்க்கத்தில் சேரவில்லை. நான் படித்த உபதேசத்தின்படி நடக்க என்னைப் பலப்படுத்தும் 'தெய்வ மகன்' என் மார்க்கத்தில் இல்லை! கிறிஸ்துவை நான் ஏற்றுக்கொண்டபோது, அவரே*

*என்னைப் பலப்படுத்தி நடத்தும் ஆண்டவராக என் அனுபவத்தில் கண்டேன். இந்த நிச்சயத்திலிருந்து என்னைப் பிரிக்க ஒருவராலும் முடியாது! என்று சொன்னான். இது நிச்சயம் என்பதை நம்மிலும் அநேகரும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம்.*

> “ **ஆண்டவர் மோட்ச வழியைப் பற்றி போதித்தார். நானே அதற்கு வழி என்றார்! ஒளியைப் பற்றி போதித்தார், நானே அந்த ஒளி என்றார்! நித்திய ஜீவனை பற்றி போதித்தார்! நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்!**

*தேவனைக்குறித்தும், மனுஷனைக் குறித்தும், இம்மையைக் குறித்தும், மறுமையைக் குறித்தும் அநேக சத்தியங்களைப் போதித்தார், நானே சத்தியம் என்றார்! பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்று போதித்தார்! பாவங்களை மன்னிக்க தமக்கு அதிகாரம் உண்டென்றார்! பாவத்திலிருந்து விடுதலையாக வேண்டுமென்று போதித்தார், குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்றார்! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று போதித்தார், என் சமாதானத்தை உங்களுக்கு அருளுவேன் என்றார்! உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்று போதித்தார், நானே உங்களோடிருப்பேன் என்றார்! கவலை வேண்டாம் என்று போதித்தார், வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தருவேன் என்றார்! நீங்கள் கடவுளைத் தரிசிக்கவேணும் என்று போதித்தார், என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார்!* **அவர் வேறே, அவருடைய உபதேசங்கள் வேறேயல்ல.** *அவரே உபதேசம், உபதேசமே அவர்! இதுவே கிறிஸ்தவனின் மகிழ்ச்சி, இதுவே விசுவாசியின் வெற்றி! எனவே, எவ்வளவுதான் சிறந்த பிரசங்கி! சிறந்த போதகர்! என ஒருவர் புகழ்பெற்றிருந்தாலும், அவர் வாழ்ந்து போதித்தாரா? என்பதை கவனியுங்கள். இல்லையேல், நீங்களும் உபதேசம் வேறே, ஜீவியம் வேறே! என்ற வஞ்சனைக்கு ஆளாவீர்கள்!*

*- பரமானந்தம் ஐயர்*

---

## சாத்தானின் ஜெயதொனி கேட்டு, துக்கமடையும் காலமிது!

*‘பெந்தெகொஸ்தேயின் அக்கினியே’ நமது தேவை*

*அன்று கூலிக்காக எந்த வேலையும் செய்யும் பையன்கள் உண்டு! இன்றோ, கூலி பெறுவதற்காகவே ஊழியம் செய்யும் மாந்தர்கள் பெருகி விட்டார்கள். ஒருமுறை, ஒரு புகழ்பெற்ற சுவிசேஷகரை ஒரு*

*வாரத்திற்கு* **500 டாலர் என காணிக்கை** *பேசி, நான்கு வாரங்களுக்கு 2000 டாலர் வாங்கிக்கொள்ள கேட்டார்கள். ஆனால் இந்த ஒப்பந்தம் 'குறைவான பணம்' எனக்கூறி அந்தப் புகழ் பெற்ற சுவிசேஷகர் மறுத்து விட்டார். இதை விவரித்துக் கூறிய ஒரு ஊழியர் "இவர்கள் ஒப்பந்த பணம் அதிகம் இருந்தால், ஆத்துமாக்களுக்காக கண்ணீர் விடுவார்கள்! ஆகிலும் யூதாஸைப் போன்ற இந்த ஊழியர்களின் கண்ணீர்.... தங்களின்* **யூதாஸின் வழி முறைக்காக** *காலம் கடந்து, கண்ணீர் வடிப்பார்கள்" எனக் கூறினார்.*

> **"இன்று சபையில் உள்ள ஜனங்கள் பெலஹீனப்பட்டு இருப்பதற்கு காரணம், பிரசங்கபீடங்கள் விலைபேசப்பட்டு 'கர்த்தருடைய வார்த்தை' இல்லாததே ஆகும்!**

*எழுப்புதலும், எழுப்புதலைக் கனலாக்கும் பிரசங்கங்களும் உருவாகுமிடம் "தேவனுக்கு முன்பாக சிந்தும் கண்ணீர்" என்பதை நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். பிரசங்கிக்கும் சகோதரர்களே, கிறிஸ்தவத்திற்கு ஏற்பட்ட அவமானத்தைக் கண்டு, நாம் வெட்கமடையாதிருப்பது நியாயம்தானா? நம் கண்களில் கண்ணீர் வராதிருப்பதைக் கண்டு, நாம் அழ வேண்டாமா? தாழ்மையுள்ள ஊழியர்கள் நம்மிடம் இல்லையே என கண்டு, தரைமட்டும் தாழ்பணிந்து நாம் ஊழியம் செய்ய வேண்டிய நேரமல்லவா? கிறிஸ்துவின் இதய பாரம் நம் நெஞ்சில் இல்லையே என, துயரமடைய வேண்டிய காலமல்லவா? இந்தக் கடைசி நாட்களில் 'தனக்கே வெற்றி' என பிசாசானவன் உலாவி வருவதைக் கண்டு, நமக்கு கோபம் வரவில்லையே என மனம் நொந்து, நம்மீது கோபம் கொள்ள வேண்டிய காலமல்லவா?*

*கம்யூனிச தலைவர் லெனின் கூறிய* **"சத்தியத்திற்கு மாத்திரமே பிடிவாதம் உண்டு!"** *என்ற வாசகம், அந்நாட்களில் மிகவும் பிரசித்தமானது. பவுல் கிறிஸ்துவுக்காக சாதித்த அனைத்தும், இந்த வாசகத்தை 'உயிரோட்டம் உள்ளதாய்' மாற்றியிருக்கிறதே! இதற்கு நேர்எதிர்பதமாய் இருப்பதுதான், 'சமரசத்திற்கு உலகத்தோடு கைகொடுக்கும்' இன்றைய கிறிஸ்தவ சந்ததி!*

**பெந்தெகொஸ்தே சபையினரை** *குறிவைத்து நான் பேசவில்லை.... அது என்னுடைய வேலையுமில்லை! நானோ, ஆதி நிலையில் பற்றி எரிந்த பெந்தெகொஸ்தே அக்கினி எங்கே? என்றே, தவிப்புடன் கேட்கிறேன்!*

*- லியோனார்டு ரேவன்ஹில்*

## கர்த்தருடைய ஊழியத்தில் நிர்விசாரம் கூடாது!

*அவர் பணி சிறப்பாய் செய்திட 'பரிசுத்தாவி' வேண்டும்*

*"தன் வேலையில் கவனமாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் பாமர மனிதருக்கு முன்பாக நில்லாமல், அரசர்களுக்கு முன்பாக நிற்பான்" என வேதவாக்கியம், மெச்சிக்கொள்வதைப் பாருங்கள்! (நீதி.22:29). நான் எல்லாவற்றையும் மிக நேர்த்தியாகச் செய்கிறேன் என்று சொல்லஇயலாது; எனினும் நான் எல்லாவற்றையும் நேர்த்தியாகச் செய்ய முயலுகிறேன்! 'இதற்குமேல் சிறப்பாக அமைக்க இயலாது' என்ற நிலை வரும்வரை நான் எதிலும் திருப்தியடையமாட்டேன். எல்லாவற்றையும் செய்து முடித்தபின்பும், எல்லாம் சரியாக இருக்கிறதா என்று 'திரும்பவும் பார்ப்பது' என் வழக்கம். நாம் ஒவ்வொருவரும் அப்படிச் செய்யவேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். ஏனெனில் அது, தேவனுடைய குணநலன்!*

*தேவன் ஒவ்வொன்றையும் படைத்துவிட்டு, அப்படியே விட்டு விட்டுச் செல்லவில்லை. அவர் அதை மீண்டும் ஒருமுறை பார்த்து,* **அது நல்லது** *என்று கண்டு திருப்தியடைந்தார் (ஆதி.1:4,10,12,18,21,25,31). இயேசு கிறிஸ்துவின் வாழ்விலும் அதே நேர்த்தியின் முத்திரை காணப்பட்டது. இயேசு கிறிஸ்து எந்தவொரு செயலையும் செய்த போதோ, பிரசங்கம் பண்ணினதுபோதோ, ஓர் அற்புதத்தை நிகழ்த்திய போதோ, ஒரு நிகழ்ச்சியைத் திட்டமிட்டு நடத்தியபோதோ, மக்கள் யாவரும் பரவசமடைந்து* **"அவர் எல்லாவற்றையும் நன்றாய் செய்தார்"** *என்று சொல்லி வியந்தனர் (மாற்கு 7:37). அதே சாட்சி, உங்களைக் குறித்தும் என்னைக் குறித்தும் சொல்லப்பட வேண்டும். ஏனெனில், தன் வேலையை நேர்த்தியாகச் செய்கிறவன் மதியற்றோருக்கு முன்பாக நிற்காமல், மதிப்புள்ளோருக்குமுன் நிற்பான், என்றல்லவா ஞானி குறிப்பிட்டார்!*

*யாத்திராகமம் 31-ம் அத்தியாயத்தில்,* **தன் வேலையை மிக நேர்த்தியாகச் செய்வதற்கு ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்த பொற்கொல்லன் ஒருவனைக் காண்கிறோம்.** *இதை விளக்கும் வேதப் பகுதியிலுள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள்: "கர்த்தர் மோசேயிடம்: நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலை பெயர் சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும்,*

மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் **சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும்** வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் உண்டாக, அவனைத் தேவ ஆவியினால் நிரப்பினேன்" (வச.31:1-5), என உரைத்ததினிமித்தமே, அந்த பொற்கொல்லன் ஞானமும், திறமையும் பெற்றான்!

தானியேலின் புத்தகத்திலும் இதைப்போன்ற ஒரு நபரைக் குறித்து வாசிக்கிறோம்: அந்த நபர், பக்தன் *தானியேல்!* இராஜ்ஜியத்தில் உயர் அதிகாரியாகத் *தானியேல்* பணியாற்றினார். "*தானியேல்* பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான்; தானியேலுக்குள் வியத்தகு ஆவி இருந்தது" (தானி.6:3) என வாசிக்கிறோம்!

"**ஒரு மனிதன் சகல வேலைகளையும் நேர்த்தியாகச் செய்வதற்கு அவனுக்குள்ளிருந்து அவனை ஊக்குவிக்கும் ஆவியை 'விசேஷித்த ஆவி' என, வேதம் குறிப்பிடுகிறது!**

தேவன், மனிதரனைவருக்கும் புத்திக்கூர்மையையும் ஞானத்தையும் சம அளவில் கொடுத்திருக்கிறார் என்று நான் நினைக்கவில்லை. அவர் சிலருக்கு *ஐந்து* தாலந்து, இன்னும் சிலருக்கு *இரண்டு*, மற்றும் சிலருக்கு *ஒன்று* என்று கொடுக்கிறார்! ஆனால், உங்களுக்குக் 'கொடுக்கப்பட்டவைகளைக் கொண்டு' எல்லாவற்றையும் சிறப்பாய் நீங்கள் செய்யவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். ஐந்து தாலந்தைப் பெற்றவன் ஐந்தைச் சம்பாதித்தான். இரண்டு தாலந்தைப் பெற்றவனிடம் தேவன், "முந்தியவன் ஐந்து தாலந்துகளைச் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறான். நீ ஏன் இரண்டு தாலந்துகளை மட்டும் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறாய்?" என்று கேட்கவில்லை. ஐந்து தாலந்துகளைப் பெற்றவன் இன்னும் ஐந்தையும், இரண்டு தாலந்துகளைப் பெற்றவன் இன்னும் இரண்டையும், ஒரு தாலந்தைப் பெற்றவன் மேற்கொண்டு ஒன்றை மட்டும் கொண்டு வந்தால் போதுமானது! 'நம் ஒவ்வொருவருக்கும்' தேவன் ஒவ்வொரு குறிப்பிட்ட அளவு ஞானத்தையும் அறிவையும் கொடுத்திருக்கிறார். அவற்றை **நம்மால் முடிந்த அளவு** பயன்படுத்தி, முடிந்த அளவு நேர்த்தியாய் காரியங்களைச் செய்ய வேண்டும்!

நீங்கள் ஒரு கர்த்தருடைய பணி செய்துகொண்டிருப்பதாகக் கொள்வோம். அந்த வேலையைச் செய்திட உங்களுக்குப் போதுமான ஞானம் இல்லையெனில், என்ன செய்ய வேண்டும்? "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்

*கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கட்டும், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கட்டும்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு சமமாயிருக்கிறான்"* ***(யாக்.1:5,6).*** இவ்வசனத்தை நாம் பல்வேறு காரியங்களுக்கு மேற்கோள் காட்டுகிறோம். நாம் நோயுற்றிருக்கும்போது அல்லது இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது, நாம் இருமனமுள்ளவர்களாயிராமல் விசுவாசத்துடன் தேவனிடம் விடுதலைக்காய், சுகத்திற்காய் மன்றாட வேண்டும் என்கிறோம்.

"**ஆனால் ஞானமாக ஒரு ஊழியத்தை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வரும்போது, தேவனிடம் ஞானத்தைத் தாரும் என்று நாம் ஏன் கேட்பதில்லை?**

"இவ்வளவுதான், இதற்குமேல் ஒன்றும் செய்ய இயலாது" என்றே எளிதாகச் சொல்லிவிடுகிறோம்! ஆனால், தேவனோ அவரது வேதமோ, அவ்வித சாக்குப்போக்கை ஏற்றுக்கொள்வதில்லையே!

சகோதரா, நீ எங்கேயிருந்தாலும் ஒரு *தானியேலாக* இரு! பல்வேறு உயர் அதிகாரிகளிடையே *தானியேல்* தனிப்பெரும் சிறப்புடையவனாக இருந்ததன் காரணம்: அவனுக்குள் ஒரு விசேஷித்த ஆவி இருந்தது! எல்லா பொற்கொல்லர்கள், இரும்புக் கொல்லர்கள் மற்றும் வெள்ளிக்கொல்லர்கள் நடுவில் 'விசேஷித்த ஆவியைத்' தன்னுள் பெற்ற *பெசலெயேலாக* இரு! ஞானத்தில் குறைவுபட்டால், ஞானத்தில் சம்பூர்ண தேவனாகிய நமது தேவனிடம் "என்னையும் ஒரு சிறந்த மனிதனாக மாற்றும்!" என்று கேளுங்கள்! உங்கள் வேலையில் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்க, ஊழியத்தில் உண்மையாயிருக்க அதுவே வழி.

- R.ஸ்டான்லி BYM

---

## "ஒத்தவேஷம் மறுத்து" நிலைநிற்கும் சபை வேண்டும்!

*'சத்திய வீழ்ச்சி' எதிர்த்திடும் நெஞ்சுறுதி தாசர்கள் எங்கே?*

நெஞ்சுறுதி கொண்ட ஒரு உத்தம ஊழியன், தன்னைச் சுற்றியுள்ள மார்க்கத் தலைவர்களிடமிருந்து அதிகமான எதிர்ப்புகளையே சந்திக்க வேண்டியதாய் இருக்கும். ஆகிலும், **ஒரு சிறு கூட்டம்** குருடாய்போன தங்கள் மார்க்கத் தலைவர்களுக்கு செவிகொடாமல், சத்திய பாதையில் நிலைநிற்பார்கள்!

*எந்த ஒரு ஆவிக்குரிய இயக்கமும், சில காலங்களுக்குப் பிறகு, உலகப்பிரகாரமான ஒரு ஸ்தாபனமாகவே மாறிவிடுகிறது. இவ்வாறு ஒரு பரிசுத்தவானால் துவங்கப்பட்ட ஒரு ஆவிக்குரிய இயக்கம்* **"செத்த ஸ்தாபனமாக"** *மாறாதிருக்க ஒரு சபை தன் உத்தமத்தில் நிலைத்திருக்க வேண்டும்!*

**"ஆதியில் கொண்டிருந்த சத்திய நிலைப்பாட்டில் கொஞ்சம் கொஞ்சமாய் சேதம் ஏற்பட்டு, முடிவில் "ஒத்தவேஷத்தால் பங்கம் ஏற்படும்" செத்த நிலைகொண்ட ஸ்தாபனமாகத் தேய்ந்து விடுகிறது!**

*தன்னுடைய அழைப்பைக் குறித்து நல்ல உணர்வுகொண்ட கர்த்தருடைய ஊழியர்கள் மாத்திரமே, மேற்கண்ட அபாயங்களுக்கு தொடர்ச்சியான விழிப்பு கொண்டிருப்பார்கள்!* **தூய்மையான தரத்தோடு** *தேவனுடைய சபை பாதுகாக்கப்பட்டிருக்க, சபையின் முன்னோடி தலைவராய் இருப்பவர், மனுஷர்களைப் பிரியப்படுத்தும்படி ஒத்தவேஷம் தரிப்பவராய் மாறிவிடாதிருக்க விழிப்பாய் இருந்திட வேண்டும்! அப்படி இல்லையென்றால், தேவன் அவர் மூலமாய் நிறைவேற்ற விரும்பிய பணியை* **தானே அழிப்பவராய்** *மாறிவிடுவார்!*

*அப்போஸ்தலனாகிய பவுலையும் அவரது ஊழியத்தையும் சற்று கவனித்துப் பாருங்கள். ஒருகாலத்தில் தேமா, பவுலுக்கு உடன் ஊழியராய் இருந்தார் (கொலோசெயர் 4:14). ஆனால், அவர் உலகத்தோடு ஒத்துப்போனபடியால், பவுலை விட்டு விலகினார்! (2தீமோ.4:10). அந்த சமயத்தில், பவுலோடு இருந்த மற்ற உடன் ஊழியர்களும் சேர்ந்தே விலகிச் சென்றார்கள்.*

*இச்சமயத்தில் தன் உடன் ஊழியர்களை, தன்னோடு வைத்துக்கொள்ள பவுல் ஏன் துணியவில்லை? அப்படி அவர் செய்திருந்தால், தேவன் அவர் மூலமாய் செய்த பணிக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டிருக்கும். இவ்வாறு தன் உடன் ஊழியர்களிடம் பவுல் கண்டிப்பாய் நடந்ததினிமித்தம், அவர்களோடு கொண்டிருந்த வெகுஜன மதிப்பு பாதிக்கப்பட்டாலும்.... அது குறித்து பவுல் சிறிதேனும் சஞ்சலம் அடையவில்லை!*

**'எதுவானாலும் நடக்கட்டும்' என பவுல் தேவனுடைய சத்தியத்திற்கு ஒத்தவேஷம் தரியாமல் உறுதியுடன் நின்றார்!** *ஏனெனில், பவுலை ஆட்கொண்டு உந்தித்தள்ளும், அவருக்குள் வாசமாயிருந்த தேவனுடைய ஆவியானவரே அனைத்திற்கும் மூலகாரணமாயிருந்தார்!*

*தான் பிரயாசப்பட்ட தேவனுடைய பணி "ஓர் செத்த ஸ்தாபனமாக" அல்லது உயிரற்ற நிறுவனமாக மாறாதிருக்கும்படி*

*பாதுகாக்க பவுல் முயற்சித்த வேளையில், சில பின்னடைவுகளை பவுல் சந்திக்க வேண்டியிருந்ததும் உண்மைதான்! பல்வேறு நிலைகளில் தேவன் தனது தாசன் மூலமாய் துவங்கிய ஊழியப்பணியில்* **"சுத்திகரிக்கப்படுதல்"** *நடந்த செயல்தான் 'அந்தப்பணி'. ஒரு உத்தம சபை, செத்த ஸ்தாபனமாய் தேய்ந்து போகாதிருப்பதற்குரிய நிரூபணமாய் தேவன் செயல்படும் 'சுத்திகரிக்கப்படும் பணி' இருக்கிறது! தேவனுடைய இவ்வித சுத்திகரிப்பு செயலை பகுத்தறியா விசுவாசிகள் 'கூட்டம் குறைந்து விட்டது' என, தவறாய் புரிந்து கொள்ளக்கூடும்!*

**ஆனால், தேவனுடைய சத்தியத்தை சகல பரிசுத்தத்தோடும், எவ்வித தரக்குறைவும் ஏற்படாமல் பாதுகாக்கும்படி, ஒரு உத்தம ஊழியன் 'சத்திய சீர்குலைவுக்கு' ஒத்துப் போகாமல் நின்றதுதான், ஓர் தனிச்சிறப்பாகும்!**

*- சத்தியவாணி*

---

## 'சொல்லியும் செய்யாதிருக்கும்' போதகர்களால் ஏற்படும் வஞ்சகம்!

*வாழ்ந்து காட்டுவதே முதல் தேவை*

*சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு கிறிஸ்தவப் பத்திரிக்கையில்* **"தேவ மக்கள் எந்த நிலையிலும், எவரிடத்திலும் கடனே வாங்கக்கூடாது"** *என்று பல உதாரணங்களோடும், நிறைய வேத வசன ஆதாரங்களோடும் ஓர் போதகர் மிக அருமையான தேவ செய்தி ஒன்றை எழுதியிருந்தார். அந்த செய்தி, வேத வசனத்தின்படி மிகவும் சரியானது! ஆனால், ஓரிரு ஆண்டுகள் கடந்த பின், அந்த போதகர் எழுதிய மற்றொரு மாதத்தின் இதழை தற்செயலாக படிக்க நேரிட்டபோது, சற்றும் நம்பவே இயலாத நேர்மாறான செய்தியை அங்கு அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்: "எங்களுக்குக் கடன் கொடுத்த வங்கிகள் இவைகள்தான்" என்று குறிப்பிட்டு, அந்த வங்கிகளின் புகைப்படங்களையும் 'கவுரவித்து' போட்டிருந்தார்!*

*இதனை ஒரு புறமதஸ்தன் கண்ணோக்குவானானால் என்ன நினைப்பான்?* **"காபி குடித்தால் உடலுக்குத் தீங்குண்டாகும்" என்று ஒரு பெரிய ஜனக்கூட்டத்தில் பேசிய ஒருவன், அந்தக் கூட்டத்திற்கு முன்பாகவே ஒரு கோப்பை காபியைப் பருகுவானானால்,** *அவனைக் குறித்து அக்கூட்டத்தினர் என்ன நினைப்பார்களோ, அதையேதான் மேற்கண்டதை ஒரு புறமதஸ்தனும் நினைத்திருப்பான்!*

*கிறிஸ்தவப் போதனைகளைப் பேசுகின்ற, எழுதுகின்ற நாம் எந்த அளவில் அவற்றைக் கடைப்பிடிக்கின்றோம் என்பதனை நாம் சிந்தித்துப் பார்த்தால் நாம் கண்ணீர் சிந்த வேண்டியதைத் தவிர வேறொன்றுமே இல்லை!*

*ஒரு சமயம், ஜெபத்தைக் குறித்துப் புத்தகம் எழுதிய பிரபல தேவனுடைய ஊழியரின் வீட்டிற்கு ஒரு விசுவாசி சென்றிருந்தார். அந்த வீட்டில் அவர் தங்கியிருந்த நாட்களில், அந்த பிரபல ஊழியர் தனித்து ஜெபம் செய்ததை விசுவாசி காணவே இல்லை. அவரது நடபடிகளும் ஒரு ஜெபமாந்தனுக்குரியதாகத் தெரியவில்லை! அந்த விசுவாசி, அதை ஒரு முறை ஒரு சிறு ஜெபக் குழுவில் கூறி மிகவும் விசனமடைந்தார்!*

*ஒரு கையில் 'நியாய பிரமாண புத்தகத்தை' ஏந்திக்கொண்டிருந்த வேதபாரகரும், பரிசேயர்களும்.... மறு கையில், "கல்லை வைத்திருந் தார்கள்". தங்கள் ஜீவியத்தில் வாழாமல், பிரசங்கித்திடும் எத்தனை துல்லியமான வேதபோதகங்களும், சபையில் அமர்ந்திருப்போர் யாவர் மீதும் "கல்லெறியும்" போதகங்களேயாகும்! (யோ.8:5). ஆகவேதான் "வேதபாரகர்கள் சொல்லுகிற யாவையும் கேளுங்கள்! அவர்கள் செய்கிறபடியே செய்யாதிருங்கள்! அவர்கள் சொல்லுவார்கள், ஆனால் சொல்லுகிறபடி செய்வதில்லை!" என்றே இயேசு எச்சரித்துக் கூறினார் (மத்தேயு 23:2,3).*

**"இந்தவிதமான, கர்த்தருக்குப் பிரியமற்ற முரண்பாடான காரியங்கள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல! "சொல்வது ஒன்று, வாழ்வில் செய்வது ஒன்று!" என, ஆதித்திருச்சபையின் காலத்திலிருந்தே அது வளர்ந்துகொண்டே வந்திருக்கின்றது.**

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல், ரோம திருச்சபைக்கு எழுதும்போது "இப்படியிருக்க, **மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத் தானே போதிக்காமலிருக்கலாமா?** களவு செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபச்சாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? நியாயப்பிரமாணத்தை போதிக்கிற நீ, **மீறி நடந்து, தேவனை கனவீனம் பண்ணலாமா?**" என்று அங்கலாய்தார்! (ரோமர் 2:21-23).

தேவனுடைய ஜீவனுள்ள நாமம், நற்கந்த மணம் வீசிப் பரவவிடாமல் தடுத்து நிற்பவர்களாய், இவ்வித போதக குருக்களே இருக்கிறார்கள்! புறமதஸ்தர்கள், இயேசு இரட்சகரை ஏற்று, அவர்களைப் பரிசுத்த அடியார்களாகவிடாமல் தடைசெய்வது, அனேகமாக, வேதத்தை கைக்கொண்டு வாழாத பிரசங்கிகளின் கேடான வாழ்க்கைதான்!

**அன்று :** "பாவத்தின் மேல் பரிபூரண வெற்றி" என, வல்லமையாய் பிரசங்கித்து ஒரு கூட்ட தேவ ஜனத்தை சேர்த்தபிறகு, பிற்காலங்களில்

ஜீவியத்திலும் ஊழியத்திலும் "தோல்வியின்" துர்க்கந்தம் ஏற்பட காரணமாயிருக்கும் ஜீவியத்தை அந்த தேவ ஜனங்களுக்கு முன்வைத்தது, பெருத்த இடறல் அல்லவா?

**அன்று:** ஒப்புரவாகுதலையும் ஒருவரையொருவர் மன்னிக்கும் தெய்வ அன்பை பிரசங்கித்துவிட்டு, தாங்களே ஒப்புரவாகி மன்னிக்கும் அன்பின் மாட்சிமையை இழப்பது சரிதானா?

**அன்று:** "தேவ ஐக்கியமும், ஒருவரோடொருவர் ஐக்கியமும்" சபையின் பிரதானம்! என கூறிவிட்டு, இன்று சுயநல போட்டியும், பிரிவினையும் சபையில் கொண்டுவருவது மாத்திரமல்லாமல் 'குடும்பங்களிலும் பிரிவினை' ஏற்படச் செய்வது சரிதானா? மகிழ்வுடன் நம்பி வந்த எத்தனை எத்தனை ஊழிய சகோதரர்கள் அவர்களின் குடும்பங்கள், எத்தனை எத்தனை விசுவாச குடும்பங்கள், நிலைகுலைந்து சிதறடிக்கச் செய்ததும் சரிதானோ?

**அன்று:** 'நல்லகுடும்பம்' கட்டுவதுபோல் குடும்பவாழ்வை சவாலாய் கூறிவிட்டு, இன்று: பகிரங்கமாய் விவாகரத்தையும், பிரிவினையையும், மறுமணத்தையும் கொண்டு வந்தது இடறலல்லவோ?

**அன்று:** ஸ்தாபன சபைகளை "செத்த சபைகள்" என அழைத்துவிட்டு, அங்குள்ள மக்கள் "இதுவே ஜீவனுள்ள சபை" என வந்தபிறகு, மீண்டும் "ஸ்தாபனமாக" மாற்றி, மக்களை சிறைப்படுத்துவதும் சரிதானோ?


**அன்று:** 'மகிமையான சுவிசேஷம்' என ஜனங்களை அழைத்துவிட்டு, இயேசுவின் ராஜகட்டளையான "நீங்கள் உலகெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்" என்ற கட்டளையை, அந்த ஜனங்களிடம் செயலிழக்கச் செய்ததும் சரிதானோ?

இவ்வாறு, "சில மனுஷர்கள்" பக்கவழியாய் பிரவேசித்து 'பரிசுத்தவான்களுக்கு' ஒரே தரம் ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைத் திருட வருவார்கள்! நாமோ "அந்த விசுவாசத்திற்காக" தைரியமாய் போராட வேண்டிய காலமே, நம் இந்தக் காலம்! என உணர்த்தி எழுதினார் *யூதா!* (யூதா 3,4 வசனங்கள்).

மேலும் "வேத வசனத்தைப் **போதித்தவர்களின் நடக்கையின் முடிவை,** கவனித்துப் பார்த்து, அதன் பின்பே அவர்களின் விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்! ஏனெனில், நமது இரட்சகர் இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், **என்றும் மாறாதவராயிருக்கிறார்**" (எபி.13:7,8) என்றே, நாம் யாவரும் புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம்! 'முடிவுபரியந்தம் நிலைநிற்கும்' விசுவாச ஜீவியம்! அன்பின் ஜீவியம்! வஞ்சனையற்ற ஊழியம் நமதாகட்டும், ஆமென்.

- T.ரத்தினகுமார்

## தேவன் மீது தாகம் கொண்ட புனிதர்!
# ஜார்ஜ் மத்திசன்




அன்பு கிருபையாய் மலருவதே 'உச்சக்கட்டம்' என கூற வேண்டும். அன்பு சாதித்ததை விட 'அன்பின் விருப்பமே' மேலானது! ஆகவே ஜீவியத்தின் தோல்வியிலிருந்தும் 'சிறந்த நன்மையை' இந்த அன்பு கொண்டு வரும். வாழ்க்கையின் துயரங்களை, இந்த அன்பு 'பொக்கிஷங்களாய்' மாற்றிக்கொள்ளும்! இப்படியெல்லாம் நடக்கும் என்பது எப்படி தெரியும்? தேவன் நம்மீது கொண்ட மாசற்ற அன்பே இந்த உயரிய பண்புகளை நமக்கு காட்டியுள்ளது! இவ்வளவு பெரிய அற்புத வாசகங்களை பாமாலை வரிகளாய் நமக்கு அர்ப்பணித்தவர்தான் இந்த ஜார்ஜ் மத்திசன்.

அவருடைய ஆங்கில பாமாலையின், சிகரம் தொடும் வார்த்தைகளைப் பாருங்கள்:

என்னை விட்டு விடாத தெய்வ அன்பே,
என் சோர்ந்த ஆத்துமா உம்மில் இளைப்பாறும்!
உமக்கு கடன்பட்ட என் ஜீவனை உமக்கே தருகிறேன்,
அது, உமது சமுத்திர ஆழத்தில் பூரணம் அடையட்டும்!

துன்பத்தின் ஊடாக என்னைத் தேடும் என் அன்பே,
என் இருதயத்தை உமக்கு மூடிக்கொள்ள முடியுமோ?
பெரும் மழை ஊடாக 'வான வில்லை' தேடினேன்
உமது வாக்குகள் பொய்த்து போகவில்லை
என் அதிகாலை நேரம் கண்ணீரற்றதாய் மாறியது!

ஒ அந்த சிலுவை, என் தலையை நிமிர்த்தியது!
உம்மை விட்டு விலகிட எனக்கு மனமில்லை!
இந்த ஜீவிய மகிமையை புழுதியில் மரித்திட தந்தேன்!
அந்தப் புழுதி மண்ணோ சிவந்து மலர்ந்து,
முடிவில்லா ஜீவனை எனக்கு வாரி வழங்கியது!

ஜார்ஜ் மத்திசன் அவர்களை பற்றி எதுவுமே அறியாதவர்கள் "என்னை விட்டுவிடாத ஓ தெய்வ அன்பே" என்ற அவரது பாமாலையை படிக்கும்போதே, அவரை அறிந்து கொள்வார்கள். பாமாலை தலைப்புவரி கூட மத்திசன் அவர்களின் ஆவிக்குரிய தாகத்தை வெளிப்படுத்தியது. இந்த பாமாலையை தனது 44வது வயதில் எழுதினார். ஆனால், இந்த பாமாலை அவருக்கு எப்போது கிடைத்தது தெரியுமா? தனது 18வது வயதில் கண் குருடானபோது கிடைத்தது!

அவர் பாடிய இன்னும் உற்சாகமான வார்த்தைகளை கேளுங்கள்: "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்" என்ற வசனத்தில் தெய்வ அன்பு ஊற்றப்பட்டு இருப்பதை பாடல் வரிகளில் எழுதினார்! அதாவது உயர்ந்த நீதிபரர், நம்மிடமுள்ள நீதியின் தாகத்தை வைத்தே ஏற்றுக்கொள்வார். நாம் நீதி அடைந்த பின்பு ஆசீர்வதிக்கலாம் என தேக்கி வைக்காமல், நீதியாய் வாழ விரும்பிய விருப்பதை மனதார ஏற்றுக் கொண்டு, தன் அன்பின் நெஞ்சத்திற்கு நேராய் ஈர்த்துக் கொள்கிறார்!

– நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, நீ தேவனிடம் செல்ல சோம்பல் நீங்கிய சுறுசுறுப்பு வேண்டும்!

ஒரு மனிதனை நம் ஆண்டவர் முழுவதுமாய் ஆட்கொண்டு நிறைப்பதற்கு, ஒருவன் தன்னை விட்டுக்கொடுத்தால் ஒழிய, அவனை அவர் ஆட்கொள்ள முடியாது! உங்களில் அவர் ஆண்டுகொள்ளும்படி ஜெயம் பெற்றுவிட்டாரா? அப்படியானால், கிறிஸ்துவாகிய அந்த விலையேறப்பெற்ற பொக்கிஷத்தை எக்காலத்தும் இழந்திடாதிருக்க ஜாக்கிரதை கொண்டிருங்கள்!

நித்தியத்தின் சொல்லிமுடியா பொக்கிஷங்களை ஒருவன் இந்த மண்ணில் நிலையாய் பெற்றிருக்க வேண்டுமென்றால், இப்பூமிக்குரிய வாழ்வில் மனதை வைத்திடாமல், எளிய ஜீவியத்தைக் கற்றுக்கொள்வது அவனுக்கு மிகவும் அவசியம். இன்றைய நாகரீக கலாச்சார உலகத்தில் ஒருவன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அதே வேளையில், பக்தியின் தியான வாழ்விலும் ஈடுபடலாம் என எண்ணுவது சுத்த அபத்தம்!

இன்றைய விஞ்ஞானம், அது வழங்கும் சொகுசான வசதிகள், ஆகிய யாவும் ஒருவனுக்குள் செய்திடும் அபாயகரமான தீமை என்னவென்றால் "தானாக சிந்திக்கும் அவனது தெளிந்த புத்தியை அபகரிப்பதுதான்!" நாகரீகம் வழங்கிய சொகுசுகள் "முயற்சித்து ஒன்றை பெற்றிடும் வாழ்விற்கு" பெறுத்த இடறலும், அபாயத்தையும் தருவதாகவே உள்ளது. எல்லாம், "ரெடிமேட்" ஆகவும் "முன்கூட்டியே ஜீரணமான செரித்ததாகவும்" இருக்கிற இந்த வாழ்க்கை, ஒருவன் 'சொந்தமாய்' ஒன்றை பெறுவதற்கு தடை செய்யும் விபரீதமாய் இருக்கிறது! இந்த நாகரீக வலையில் சிக்கியவனிடம் "மூளைச் சலவை" நாளுக்கு நாள் ஏற்பட்டு, 'உணர்வடையும்' ஆற்றலை அவனைவிட்டு அகற்றிவிடுகிறது! இதுபோன்ற நிலைகொண்டவன் வெகு சீக்கிரத்தில் 'சோம்பல்' கொண்டவனாய் மாறுவான் என்பது உறுதி!

இம்மண்ணுக்குரிய ஜீவியத்தில் 'சோம்பலை' கொண்டு வந்துவிட்டால் பிசாசுக்கு அதுபோதும், ஆவிக்குரிய சோம்பலை அவன் உள்ளத்தில் கூடைகூடையாய் கொட்டிவிடுவான்! உறுதிபூண்ட தீர்மானங்கள்.... தீர்க்கமான முடிவுகள்.... ஆகிய எதுவும் அவனுக்கு எட்டாத ஒன்றாய் மாறிவிடும்! வாலிபனே, உறுதியான தீர்மானத்தோடு தேவனிடம் நெருங்கி வர, உன் சோம்பலை உதறிவிட்டு, தீவிரமாய் அவரை அண்டிக்கொள்!!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.